# தேவனை அறிவது மெய்யாகவே சிறந்தது




## 1.4 வரப்போகிற நியாயாதிபதி

**வேத வசனம்:** **பூமிக்கு வானம் எவ்வளவு உயரமாயிருக்கிறதோ, அவருக்குப் பயப்படுகிறவர்கள்மேல் அவருடைய கிருபையும் அவ்வளவு பெரிதாயிருக்கிறது.**

*சங்கீதம் 96:13*

**அறிக்கை:** **தேவனுக்குப் பயப்படுகிறவர்களிடத்தில் அவருடைய அன்பு பெரிதாயிருக்கும்**

**சத்தியம்:** தேவனாகிய கர்த்தர் இரக்கமும் மிகுந்த கிருபையும் உள்ளவர். அவருடைய மிகுந்த தயவினாலே மனிதனை உண்டாக்கினார். இதனால் நாம் அவருடைய குடும்பத்திலும் பின்பு நித்தியத்திலும் இணைகிறோம்.



### வேத பகுதி: மத்தேயு 25:31-46

**பாடம்** "அப்பொழுது, ராஜா தமது வலதுபக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து: வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள். பசியாயிருந்தேன், எனக்குப் போஜனங்கொடுத்தீர்கள். தாகமாயிருந்தேன், என் தாகத்தைத் தீர்த்தீர்கள். அந்நியனாயிருந்தேன், என்னைச் சேர்த்துக்கொண்டீர்கள். வஸ்திரமில்லாதிருந்தேன், எனக்கு வஸ்திரங்கொடுத்தீர்கள். வியாதியாயிருந்தேன், என்னை விசாரிக்க வந்தீர்கள். காவலிலிருந்தேன், என்னைப் பார்க்கவந்தீர்கள் என்பார்".

1. செம்மறியாடுகள் மற்றும் வெள்ளாடுகள் ஆகிய இரண்டும் எந்தவித மனிதரைக்குறிக்கிறது?

(சுயத்தை மையப்படுத்தும் மனிதர்கள் மற்றும் தேவனையும் பிற மனிதரையும் நேசிக்கும் மனிதர்கள்)

2. நீங்கள் எந்த வகை ஆடுகள்? செம்மறி ஆடா? வெள்ளாடா?

3. உங்கள் வீடுகளில் உங்கள் பெற்றோருடன் எவ்விதம் நல்ல உறவை உருவாக்கலாம்?

4. உன்னுடன் இருப்பவர்களைக்குறித்து அதிக கரிசனை உனக்கு இருக்க வேண்டுமா?

5. "நித்திய அக்கினி" என்று மத்தேயு 25:41 எதைக் குறிப்பிடுகிறது?

6. தேவன் அளவுகடந்த அன்பும், நீதியும் உடையவர் என்று வேதாகமம் குறிப்பிடுகிறது.

"அவர் நீதியிலும் நியாயத்திலும் பிரியப்படுகிறார். பூமி கர்த்தருடைய காருணியத்தினால் நிறைந்திருக்கிறது". (சங். 33:5, 89:14)

**முடிவுரை:** "ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே..." ஒவ்வொரு மனிதனுடைய செய்கைக்குத் தக்க பலனைக் கர்த்தர் தருவார் (எபிரெ. 9:27, ரோ. 2:6) என்று வேதாகமம் குறிப்பிடுகிறது. தேவன் திரும்ப வரும்போது நாம் நித்திய தண்டனைக்கு அல்ல, நித்திய வாழ்வுக்குள் செல்ல வேண்டும். ஆகையால் நாம் சுயநலத்துடன் வாழாமல் தேவனைப் பிரியப்படுத்தும் வாழ்வு வாழவேண்டும். அப்போது தேவனுக்கு நாம் சரியான கணக்கை ஒப்புவிக்க முடியும். "பசியாயிருந்தேன், எனக்குப் போஜனங்கொடுத்தீர்கள். தாகமாயிருந்தேன், என் தாகத்தைத் தீர்த்தீர்கள். அந்நியனாயிருந்தேன், என்னைச் சேர்த்துக்கொண்டீர்கள். வஸ்திரமில்லாதிருந்தேன், எனக்கு வஸ்திரங்கொடுத்தீர்கள். வியாதியாயிருந்தேன், என்னை விசாரிக்க வந்தீர்கள். காவலிலிருந்தேன், என்னைப் பார்க்கவந்தீர்கள்" என்று அவர் நம்மைப்பார்த்து சொல்லட்டும்.

**ஜெபம் / அழைப்பு:** இன்றைய சத்தியம் நமது இருதயங்களில் எழுதப்படும்படி இயேசுவின் நாமத்தினால் ஜெபியுங்கள்.